திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, எழும்பூரிலுள்ள மகளிர்-சிறுவர் மருத்துவமனையில் மிக நெருக்கடியாக, அதாவது ஒரு நாளைக்குப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் செல்கின்றன. அவர்களை உடனடியாகக் கவனிப்பதற்கான வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே அதை விரிவுபடுத்த அரசு திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாகவே மருத்துவமனைகள் என்றால் மக்கள் கூட்டம் அதிகமாகிறது. ஆகவேதான் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை வலியுறுத்தி இந்தக் குழந்தைகளினால் ஏற்படும் தொல்லை வீட்டுக்கும் வேண்டாம், நாட்டுக்கும் வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

வெள்ளக்கோவிலிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம்

* 453 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Government Hospital at Theni

* 454 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state--

(a) whether the hospital at Theni has been opened and is functioning;

(b) if so, whether there is a proposal to increase the number of doctors; and

(c) the steps proposed for expansion of the Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம். இத்திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

(உ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தேனியிலுள்ள மருத்துவ மனையானது சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கு சென்றிருந்தபொழுது அறிந்திருப்பார்கள். இப்பொழுது அங்கே ஒரு டாக்டர்தான் இருக்கிருர். அங்கு இன்னும் டாக்டரைப் போடுவதற்கும், அந்த மருத்துவமனையை விஸ்தாரப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாகவே பொறுப்புள்ள தலைவர்கள் கேட்கின்றபொழுது, எல்லா மருத்துவ மனைகளும் விஸ்தாரப்படுத்தப்பட வேண்டுமென்று ஒவ்வொரு மருத்துவமனையைப் பற்றியும் கேட்கும்பொழுது நாட்டுமக்களுக்கே சந்தேகம் உண்டாகிவிடும், மருத்துவமனை இருக்கிறதா என்று. ஏனென்ருல் 10 இலட்ச ரூபாயில் இப்பொழுதுதான் தேனியில் கட்டி முடிக்கப்பட்டு 3 தினங்களுக்குமுன் திறந்து வைக்கப்பட்டது. அங்கே ஒரு பெண் டாக்டர் தேவை என்பதை இந்தத் துறை ஏற்று, நிதி இலாக்காவிற்கு சம்மதம் கேட்டு எழுதியிருக்கிறது. நிதி இலாக்கா அதை ஒத்துக்கொண்டால், அங்கே ஒரு பெண் டாக்டரும் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவ மனையிலுள்ள காசநோய்ப் பிரிவு

* 455 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை அரசினர் இராசா மிராசுதார் மருத்துவ மனையில் செயல்பட்டு வரும் மாவட்ட காச நோய் தடுப்பு நிலையத்தினை நாகையில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

* 456 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தற்போது தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் உள்ள காச நோய் பகுதியில் இருக்கும் படுக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 30 படுக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினு எண் 457, மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள்.